## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| M.C.O.P. No. 58/2018 | Date : 25.08.2023 | RW1 |
|---|---|---|
| Name: கிருஷ்ணமூர்த்தி | S/o. **ஆண்டி** | |
| Evidence Recorded Time: 01.11 P.M. to 01.35P.M. | | |

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

விபத்து சம்மந்தமாக எனக்கு ஆவணங்களின் அடிப்படையில்தான் தெரியும் என்றால் சரிதான். மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் விவரங்கள், ஆவணங்களின் விவரங்களை எனது வழக்கறிஞரை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.9 பிரபாகரனின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ள விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். விபத்தினை ஏற்படுத்திய லாரி மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். மேற்படி ரோடு இறக்கமான ரோடு என்றால் சரிதான். வாகனத்தில் பாரம் அதிகமாக இருந்து, இறக்கமான பகுதியில் வரும் போது வாகனம் கட்டுப்பாட்டை இழக்கலாம் என்றால் சரியல்ல. போலீசார் 1ம் எதிர்மனுதாரர் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இறந்துபோன பிரபாகரன் மீதோ, டிராக்டரின் ஓட்டுநரின் மீது எந்த குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் மீது தவறு இருந்ததால்தான் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். இறந்துபோன பிரபாகரனுக்கும் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றாலும், அது ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். பிரபாகரன் ஓட்டி சென்ற TN 52 T 0937 என்ற வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில்தான் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எங்கள் நிறுவன ஆய்வு அதிகாரி அறிக்கையில் தாக்கல்

செய்துள்ள விவரங்கள் அனைத்தும் சரிதான் என்றால் சரிதான், அந்த அறிக்கை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.1 அறிக்கையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைதான். மேற்படி விபத்து குறித்து விசாரித்ததில் TN 52 T 0937 ஹீரோ ஐஸ்மார்ட் என்ற இருசக்கர வாகனத்தை பிரபாகரன் என்பவர் ஓட்டிவந்தபோது தனக்கு முன்னால் ஏற்பட்ட திடீர் போக்குவரத்து தடங்கல் காரமணாக பிரபாகரன் தான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை நிலைதடுமாறி நிறுத்தியபோது அவர்களுக்கு பின்னால் வந்த TN 30 S 9488 என்ற லாரி வேகமாக வந்து, அவர்கள் மீது மோதியதில் பிரபாகரன் பின்னால் உட்கார்ந்து சென்ற தேவராஜன் இருவரும் பலத்த அடிபட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தேவராஜன் இறப்பிற்காக எம்.சி.ஓ.பி.747/2019 சேலம் சிறப்பு மோட்டார் வாகன இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது குறித்து ஆவணங்கள் எங்கள் கோப்பில் இல்லை. மேற்படி எம்.சி.ஓ.பி.747/2019 மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது, நான் இந்த வழக்கில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் இறந்துபோன தேவராஜனின் மகள் தாக்கல்செய்திருந்த எம்.சி.ஓ.பி.747/2019 மனுவில் எங்கள் நிறுவனத்தால் லோக் அதலாத்தில் சமாதானம் பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அவார்டு ஆனது மேற்படி எம்.சி.ஓ.பி.747/2019 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி எம்.சி.ஓ.பி.747/2019 ல் வழங்கப்பட்ட அவார்டு ஆனது ம.சா.ஆ–21 ஆகும். மேற்படி எம்.சி.ஓ.பி.747/2019 வழக்கில் டிராக்டர் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டு மனுக்களில் இந்த மனுவில் மட்டும் டிராட்டரை தரப்பினராக சேர்க்கவேண்டும் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இன்சூரன்ஸ் நிறுவனமும், டிராக்டரும் இந்த மனுவில் அவசியமற்ற தரப்பினார் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1–ல் இறந்துபோன பிரபாகரன் மேட்டுர் தெர்மலில் வேலை செய்து வந்தார் என்றால் விபத்து

சமயத்தில் வேலை செய்யவில்லை. மால்கோவில் வேலை செய்து கொண்டிருந்தபோது ரூ.48,027/- சம்பளமாக பெற்றார் என்று எ.ம.சா.1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுப்படி உத்தரவாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

ஒம்/-RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.